814


உ

கடவுள் துணை.

# போரூர்
# முருகன் பாட்டு.

புதிய வர்ணமெட்டு.

814
L. 22
20 FEB 1922



M. S. M. R. ரயில்வே சண்டிங்மாஸ்டர்

**P.** வேலாயுதமுதலியார், விருப்பத்தின்படி

ஸ்ரீ-மாணிக்கநாயகரவர்களால்

இயற்றப்பட்டு,

...ளீ ஸன் ஆப் இந்தியா பிரஸில்

...திப்பிக்கப்பெற்றது.

1922. [அணா 1.

...ஸ்டர் காப்பிரைட்.

இ26:38·2112JR
N22
125962

உ

கடவுள் துணை.

# போரூர் முருகன் பாட்டு.

## புதிய வர்னமெட்டு.

### விநாயகர் துதி - வெண்பா.

முருகரவர் நற்பதமே இருசெவியிற் கேள்சுகமே
வருகுமென பெறியவர் வெல்ல க்கதனை-சிறுவனிவன்
சிறமதிலே யான்கொண்டு செல்வனுனை முன்கண்டு
கரங்குவித்தேன் காலையென்னைக் கார்.

OFFICE OF THE REGISTRAR 20 FEB 1922 MADRAS
814 / 1.22

---

### ஆண்டிபண்டாரம் வர்னமெட்டு.

பல்லவி.

ஆறுமாமுகா வெனை யாண்டிடுங்குக போரூர் ஆ

கண்ணிகள்.

1 போரூர்தனையடுத்து சூரரைகருவருத்து
ஆறுமில்லாமலையின்மீது ஆனந்தமாய்நின்றுக்கொண்ட ஆ

2 தண்டாமரைமுகனே தாசர்க்குகந்தவனே
அண்டாதிதேவர்கோனே அரியமாலின்மருமகனே ஆ

3 ஐவேலந்தனிலொளித்த ஆதிசிவனுக்குதித்த
கைவேலையான்தொழுதேன் காருமென்னைகந்தசாமி ஆ

4 வந்துகலகபுரி வள்ளிகதைசொல்லமனம்
நொந்து எழுந்துநீரும் நொடியில்செட்டிவடிவுகொண்ட ஆ

5 வளையர்விற்கும்செட்டியைபோல் வள்ளியிடம்சென்றவுடன்
விலைநயம்வாங்குமென்ற வீரனேகடைக்கண்பாரு ஆ

6 கன்னிக்குறவள்ளியின்மேல் காதல்கொண்டுயிங்கிதமாய்
வர்னமயிலேரிரங்கி வனந்தனிலேவாதுசெய்த ஆ

7 வேடர்வரக்கண்டவனே வேங்கைமரமானவனே
தேட அகப்படாமல் திணைமாவுத்தேன்தின்றவனே ஆ

8 அண்ணனை மனதிலெண்ணி சொன்னதும்வெள்ளானைவர
கன்னியைபயமுருத்தி காரியமுடித்துவந்த ஆ

9 வேடகுறகன்னியிடம் வெள்ளானையானவிடம்
வோடமுடியாததடம் வுடனேதிருமணமுடித்தாய் ஆ

10 வள்ளிதெய்வானையோடு வாகனத்தைகையில்தொடு
புள்ளிமயிலேரிவந்து புத்ரனைக்கண்பாருமையா ஆ

11 சிறுமணவூர்சீடன்கவி செப்பநகர்க்குதவி
அறுமையாய்பாடும்புவி ஆட்டம்பாட்டம் ஒட்டம்போரூர் ஆ

---

உள்ளமிகமகிழும் வள்ளிமணாளனே யென்ற வர்னமெட்டு.

கண்ணிகள்.

1 போரூர் முருகய்யனே திருமெந்தன் வினை
போற்றிசெய்தேநானுந்தனை யெழுந்தெனை
காற்றுரக்ஷிப்பாய் மைந்தனை பல
புலவர்மகிழும் மலைமகளுக்கு
இளையகுமர னிலையோசொலுவாய் போ

175962

2 காயிவலையதனை சாமியகற்றவா
கந்தாசரவணபவா கலிதீரவா
செந்தாமரைமுகதேவா அந்த
கரிமுகனுக் கிளையவனான
அறுமுகனே வருவாய் குருவாய் போ

3 முன்னாருனுளனது அன்னைவயற்றினில்
மூழ்கிவந்ததுபோதுமே அறுளோதுமே
முக்தியளிக்கும்பாதமே திரு
மாலின்மருகா பாலன்முருகா
ஞாலம்பெருக கோலம்வாரும் போ

4 துஷ்ட்டசூரரைமுனம் கஷ்டமுடன் தூயனே
தொல்லையருத்தநேயனே நான்சேயனே
அல்லலகற்றுபாயனே முந்தி
தொந்திவண்ணனுடன் பிந்திபிரந்த
கந்தனேவந்து எந்தனைக்காரும் போ

5 ஓமென்ற அக்ஷரத்தின் வுண்மையை துய்யனே
வோதும்பன்னிருகைய்யனே யெனதைய்யனே
சாதுக்கருளும்மெய்யனே அந்த
வுத்தமியான சத்தியின்பாலா
நித்தமென்மீதிர் சித்தம்வை வேலா போ

6 வானோர்புகழுந்தேவ யானைமணாளனே
வாருந்தணிகைவேலனே அநுகூலனே
தீரும்பிறவிலோலனே குற
வள்ளியைதேடி வனத்தைநாடி
பள்ளியிற்கூடி படுத்தாயோடி போ

7 மன்னர்புகழும்சூளை சென்னையதிபனே
மாணிக்கமென்னுஞ்சிறுவனே இவனொருவனே
காணிக்கைகொண்டு தருவனே மாய
கண்ணன் மருகா காரும் முருகா
யெண்ணம் பெருக என்னிடம் வருக போ

---

## தணிகைமலை வடிவேலர் பேரில் துதி.

அம்புவி போற்றுங்கனவானே என்றவர்னமெட்டு.

கண்ணிகள்.

1 அப்பா தணிகைமலை வேலா யெனக்
கார் துணை சொல்லு மனு கூலா
செப்பமுடியவில்லை சேயநான்பட்டதுன்பம்
இப்பிரவிபோக்கி வுந்தனிடையில்சேருமே யெனதப்பா

2 போரூர்முருகனல்லோ நீரும் யெந்தன்
பொல்லா பிணிகளையும் தீரும்
பார்க்கடந்துவந்தேன் பாதங்கதியடைந்தேன்
கார்க்குந்திருமுகத்தால் பார்க்கலாகாதோ யெனதப்பா

3 ஆறுமுகம்படைத்த அய்யா யெனை
ஆதரித்தபோது முருகையா
அண்டாதி தேவருன்னை கண்டுநிதம்பணியும்
தண்டாமரைமுகாநின் தாள்பணிந்தேனே யெனதப்பா

4 தக்கன்யாகந் தணிக்க சென்றாய் நல்ல
தாசிநடனம்பார்த்து நின்றாய்
தந்தைவியேர்வையதில் வந்த அகோர வீரன்
வுந்தனைவந்துதேட ஓடலாகுமோ யெனதப்பா

5 நரைதிரைபிணிமூப்பு சாக்காடு தள்ளி
நல்லவுருவாய் கட்டுவீடு
நாதனேயென்மும்மலத்தை காதவழியோட்டிவைத்துன்
பாதமதிற்சேர்த்து நாலுவேதமோதுமே யெனதப்பா

6 செப்பமனங்கவரும் நாதா யெந்தன்
சேதியரிந்து யின்னம் வாதா
சேயனெனக்குதவி செய்தால் வரும்பதவி
மாயன்மகன் ப்ரம்ம னுபாயமாய் நிர்ப்பார் யெனதப்பா

7 சென்னை நகரமென்னும் பூமி கவி
செய்தோன் ஞானமாணிக்க சாமி
செப்பும்பதம் பிரித்து தப்புபிழைதிருத்து
இப்பாடலைப்படிப்போ ரிடரை தீருமே யெனதப்பா

---

# போரூர் முருகன்பாட்டு.

கோபிகா ஸ்ரீபரந்தாமா வென்ற வர்னமெட்டு.

இராகம்-இந்துஸ்தான்-தோடி-தாளம்-ஆதி.

பின்முடுக்கு - கண்ணிகள்.

1 போரூர்புகழ் சுப்ரமண்யா புலவர்கள்
போற்றுமோர் கண்யா
திருப்பதியில்வாழ் புண்யா தேவர்கள்
மகிழும் லாவண்யா
தினைத்தேன் வனத்தில் தின்றோனே
தினமுன் தாள் பணிந்தேனே
சினத்தை தணித்து நின்றோனே
சிவனுக்கிளைய மைந்தனே போரூர்

2 பக்தர்கள் பணியும் லோலனே பார்வதி
யீன்ற சீலனே
சித்தர்கள் திகழும் வேலனே சிகியி
லேறும் பாலனே
அகத்தின் சுகத்தைப் பகைத்தோனே
அசுரரின் குலத்தை வதைத்தோனே
நகைத்து ஜகத்திற் திகைத்தோனே
நரர்கள் நடுங்க வுதித்தோனே போரூர்

3 சிறுமணவை யெனும்பூமி செல்வன்
குரு முனிசாமி
மறுளூன் மேல் கொண்டவாமி மாணிக்க
சாமி நல் நேமி
அறியா சிறியனுனைக் கண்டு
ஆனந்த மனதில்மிக கொண்டு
பிரியா திருக்கழுன் விண்டு
பித்தனும் செய்தேனே தொண்டு போரூர்

வேலா விமலனருள்பாலா என்ற வர்னமெட்டு.
இராகம்-செஞ்சுருட்டி-தாளம்-ஆதி.

பல்லவி.

பாலாபரமனருள்சீலா பன்னிருகரம்
வேலாயுதம்பிடித்தகாலா நற்
பதுமல-ரதுகதி-இதுமுத-லொருதுதி பாலா

அநுபல்லவி.

மேலோர்புகழும்வேலா மெல்லிதெய்வானைலோலா
மேதினியோர்களனுகூலா நின்
மயமுறும்-பயலெனை-ஜயம்பெர-தயசெய்யும் பாலா

சரணங்கள்.

1 காயம்வந்ததைசொல்லமாயம் கடைத்தேர
வுபாயமரிந்துரைத்தி ஞாயம் வுன்
கடிமலர்-முடியதை-படியரிந்-தடியவர் காயம்
ஆயன்மகன் சகாயன் அருளதில்வந்தசேயன்
ஆதரித்தோதும் கார்த்திகேயன் அவ
ரனுமதி-யென துதி-வினையதின்-மனசதி பாலா

2 காரும்கர்மவினையைதீரும் கருணையைவைத்
தேரும் பச்சைமயிலில்நீரும் அக்
கரிமுக-னிளையவ-அறுமுக-சரவண காரு
கோரும்வரத்தைதாரும் குமரனெனைக்கண்பாரும்
கோபாலன்தன்மருகாவாரும் குற
குலமகள்-வலைதனில்-நிலைபெர-கலவிசெய் பாலா

3 யேதுயென்மீதிலின்னம்வாது யிரைவாயோக
சாதுவனக்கேனிந்தசூது நீ
இதுவரை-பதிலுரை-சதுர்மரை-பொதுமுரை-யே
மாதுவள்ளியின்மீது மருளதுகொண்டபோது
மாயவெள்ளானை வந்ததேது யென்
மதியுனை-கதியென-துதிசெயும்-அதிபனே பாலா

4 பாசவலையகற்றுமீசா பாலனுக்குப்
தேசம்செய்துவை முருகேசா திரு
பதிமுத-லதிபதி-மதிநதி-கெதிவிதி பாச
தாசன்மாணிக்கவாசன் தமிழ்முனிசாமிசிஷன்
தாளிணையைபணிந்தநேசன் இத்
தருணமே-குருவெனக்-கருள்புரி-பரங்கிரி பாலா

இராகம்-கமாசு-தாளம்-ஆதி.

பல்லவி.

மாது வள்ளியின்மோகா மாமயில்வாகா மாது
மகத்த மிருத்த ஜெகத்த ரக்ஷகா மாது

அநுபல்லவி.

பாதுகார்த்தருளுவாய் நீதுவாரதிப்போது மாது

சரணங்கள்.

1 யேது யேதுயென்னுடன்வாது—சண்முகா—யே
சாது முனிவர்துதி சரவணனே தருணமிது கருணைபுரி மாது

2 கலியுகதெய்வமே கண்பாரும்—யென்னையா—கலி
மெலியமன தருள்வாய் மெய்யனே துய்யனேபன்னிருகையனே- மாது

3 மங்கை வள்ளி தெய்வானை மனோஹரா
எங்குமே நிறைந்திலங்குஞ் சுந்தர
ஐங்கரர்க்கிளைய சங்கரிபுத்திரா
துங்கமாமுனிவர் தொழுமவர் மித்திரா
துதித்துவுன தடிபதித்து வுளமதில்
துன்பம்நீக்கி-இன்பம்தேக்கி அன்புண்டாக்கி அருளைதாக்கி
மாஅற்புதசிங்காரா யெனையாளும் வுபகாரா
அநுதினம் சுப்பருயன் துதிபுரிசாமி சரஹனபவ
சோதனைசெய்யாதே வுந்தன்பாதமே கெதியேமட மாது

175962

அம்பாள் மதுரை மீனுக்ஷி என்ற மெட்டு.

இராகம்-மால்கோஸ்-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

சண்முகா மயூரகிரிவாசா வள்ளிசரச மாடுல்லாசா
தெய்வானை தனக்குவாய்த்த நேசா தருணமுருகேசா
கருணைபிரகாசா தயவுசெய்விஸ்வாசா சண்

பேசாதிருப்பதுநீயேது உன்பெருமை சொல்லொணுது
யேழை பேரிலென்னவாது புரிவதுதகாது
சிறுவன்மிகச்சாது கிருபைசெய்யிப்போது சண்

சொர்னவேலலங்காரா சூரர்தம்மைவென்றதீரு
தோகைமயிலிலேறும் வீரு துரிதமுடன்வாருய்
அருமுகத்தால்பாருய் யெனதுகலி தீருய் சண்

உலகளந்தமாமன் திருவாலி உன்தகப்பன் சுத்தகாலி மாரிமுத்து
சொல்லுங்கவிக்குநாவில் ஆத்தாள் பத்ரகாளி
அண்ணன்பெரிச்சாலி யேரினதுகேலி சண்

போரூர் முருகன்பாட்டு முற்றிற்று.

175962 175962

| | | | |
|---|---|---|---|
| மஹாத்மா காந்திபாட்டு முதல்பாகம் | 0 | 1 | 0 |
| ஷை இரண்டாம்பாகம் | 0 | 1 | 0 |
| அருள்நடைஆண்டிப்பண்டாரம்பாட்டுமுதல்பாகம் | 0 | 1 | 0 |
| ஷை இரண்டாம்பாகம் | 0 | 1 | 0 |
| போரூர்முருகன்பாட்டு | 0 | 1 | 0 |
| விவேகவிளக்ககீர்த்தனம் | 0 | 0 | 6 |
| கல்லுளிமங்கன் கலியாணம் | 0 | 0 | 6 |
| 16-புத்தகம் அடங்கிய நூதன சில்லரைகொத்து | 0 | 6 | 0 |

**என்விலாசம்—எஸ். டி. மாணிக்கநாயகர்,**

நெ. 2. வெற்றிலைபாக்கு கடை, சூளை பஜார்ரோட் மதராஸ்.

இரண்டாபாகம் கூடிய சீக்கிரம் வெளிவரும்.

வி-பி-யில். அனுப்பமுடியாது.

## "சந்திரகாந்தா"

## கூந்தல்வளரும் பரிமளத்தைலம்.



நண்பர்கள் எமது கூந்தல்வளர் தைலமானது வாசனையோ அதிகம் மயிரோனீளும் சிக்கிடையாது மயிர் கால்களுக்கு பலம்கொடுப்பதும், மூளையைத் திடப்படுத்துவதும் மயிருக்கு மழமழப்பு கொடுப்பதும், மயிரை அடர்ந்து வளரும்படி செய்யும். இதை ஒருமுறை வாங்கிப்பார்த்தால் எமது எண்ணையின்பெருமை தெரியவரும்.

5-பலம் எண்ணை அடங்கிய டப்பி

1-க்கு ரூபா 1.

## தந்தப் பொடி.

இது பல்நோய், கூச்சல், பல்லசைவு, ஈறு கரைந்து இரத்தமுண்டாதல் முதலியவைகளை நீக்கி ஈறைக் கெட்டிப்படுத்தி பற்களை இறுக்கி சகல துன்பத்தையும்ஓட்டிவிடும். டப்பி 1-க்கு அணா 4. 10-டப்பி ரூபா 2-0-0

## சர்வபடை சங்காரி.

இந்த ஆச்சரியப்படத்தக்க மருந்தினால் தீரும் வியாதிகள் ஆண்பெண் இருதரத்தார்க்கும் இடுப்பு துடை முகம் முதுகு மற்ற எந்த விடங்களிலாயினும் உண்டாகும் எவ்விதவண்கெடி படைகளும் மூன்றுவேளை தடவினால் யெரிச்சல் நாற்றமுதலிய துர்க்குணம் கிடையாது.

இந்தமருந்து வாயில் படக்கூடாது.

கிரயம் டப்பி 1-க்குஅணா 0 8 0

## மேகவெள்ளைச் சூரணம்.

இது பல|காரணங்களினா லுண்டாகப்படுகிற மேகவெட்டை, நீர்சுருக்கு, நீர்குற்றல், நீரெரிச்சல், நீர்தாரையிலிருந்து சீழிரத்தம் வடிதல் முதலியவியாதிகள் ஆண்பெண்பால் இருதிறத்தவர்களும் எத்தனை நாட்பட்டதாயினும் எம்மருந்திலும் தீராததாயிருந்தாலும் இம்மருந்தை யுபயோகித்த பத்தே நாளில் ஆச்சரியப்படத்தக்க அனுகூலத்தைக் கொடுக்கும்.

கிரயம் டப்பி 1-க்கு 0 12 0

---

எமது கம்பெனியின் பலவித சாமான்களடங்கிய கேட்லாக் தேவையானவர்கள் அரையணா ஸ்டாம்பு அனுப்பி அடியிற்கண்ட விலாசத்திற்கு பெற்றுக்கொள்ளலாம்.

**எமது விலாசம்:—குருகோபிந்து அண்டு கம்பெனி,**

வேப்பேரி போஸ்டு, மதராஸ்